**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.210/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சத்தியசீலன் | Prosecution | LW-6 as PW-6 |
| Father Name | செல்வம் | Defence | |
| Village | சரஸ்வதி விளாகம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 26/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **25.08.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து எலட்ரிசியன் வேலை செய்கிறேன். கடந்த 31.08.2023 ம் தேதி காலை 10.00 மணியளவில் நானும் சக்திவேல் என்பவரும் கொள்ளிடம் GH அருகில் உள்ள பள்ளிக்கூடத்தில் நின்று பேசிக்கொண்டிருந்த போது கொள்ளிடம் போலிசார் மாதிரி வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். சாட்சியாக நானும் சத்திவேல் என்பவரும் கையொப்பம் செய்தோம். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன ஊரில் வசிக்கிறேன் என்றால் சரஸ்வதி விளாகத்தில் வசிக்கிறேன். சம்பவம் நடந்தது எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கிய பேப்பரில் வரைபடம் இருந்தது என்றால் சரிதான். எத்தனை மணிக்கு வரைந்தார்கள் என்றால் காலை 10.00 மணிக்கு. போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கிய மாதிரி வரைபடம் பேப்பரில் வடக்கு பக்கம் GH என்றாலும் தெற்கு பக்கம் பள்ளி இருந்தது என்றாலும், சரிதான். வடக்கும் தெற்கும் தான் வரைபடத்தில் இருந்தது என்றாலும் மேற்கு இல்லை என்றால் சரிதான். போலிசார் என்னிடம் GH யில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பிறகு

போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இரண்டு நாட்கள் கழித்து விசாரித்தார்கள்.

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.210/2023**

| Deposition of Name | சக்திவேல் | Prosecution | LW-5 as PW-5 |
|---|---|---|---|
| Father Name | வடிவேல் | Defence | |
| Village | கொள்ளிடம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 26/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **25.08.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து டிரைவராக வேலை செய்கிறேன். கடந்த 31.08.2023 ம் தேதி காலை 10.00 மணியளவில் நானும் சத்தியசீலன் என்பவரும் கொள்ளிடம் GH அருகில் உள்ள பள்ளிக்கூடத்தில் நின்று பேசிக்கொண்டிருந்த போது கொள்ளிடம் போலிசார் மாதிரி வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். சாட்சியாக நானும் சத்தியசீலன் என்பவரும் கையொப்பம் செய்தோம். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது ஆகும். **அந்த பார்வை மகசர் அசாஆ.2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** நான் எங்கு வசிக்கிறேன் என்றால் கொள்ளிடத்தில் வசிக்கிறேன். சம்பவம் நடந்த இடம் எது என்றால் கொள்ளிடம் பள்ளி அருகில். என் வீட்டிற்கும் பள்ளிக்கும் இரண்டு கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றால் வேலை சம்பந்தமாக வந்தேன். இந்த வழக்கின் அசா-1 விஜயேந்திரன் என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் நண்பர். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன விபரம் எழுதப்பட்டு இருந்தது என்றால் அதில் படம் வரைந்து இருந்தது. அந்த படத்தில் யார் யார் வீடுகள் வரையப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**2.** போலிசார் என்னிடம் படம் வரைந்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால்

சரிதான். படம் வரைந்து கையொப்பம் வாங்கியதில் கிழக்கு, மேற்கு, வடக்கு , தெற்கு பக்கம் என்ன இருந்தது என்றால் வடக்கு பக்கம் GH என்றாலும் கிழக்கு பக்கம் ரயிலவே ஸ்டேசன் இருந்தது என்றால் சரிதான். மேற்க்கு பக்கம் என்ன இருந்தது என்றால் தெரியாது. போலிசார் சம்பவத்தை பற்றி எப்போது விசாரித்தார்கள் என்றால் தேதி நினைவில் இல்லை என்றாலும் போலிசார் பெயர் தெரியவில்லை என்றாலும் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.210/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | செல்வம் | Prosecution | LW-4 as PW-4 |
| Father Name | ஆறுமுகம் | Defence | |
| Village | சரஸ்வதி விளாகம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 56/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **25.08.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து விவசாய வேலை செய்கிறேன். கடந்த 29.08.2023 ம் தேதி இரவு 7.30 நான் வீட்டில் இருந்த போது எனது உறவினர்கள் தொலை பேசி மூலம் எனது அண்ணன் மகன் அடிபட்டு கிடப்பதாக தகவல் கூறினார்கள். அதனை தொடர்ந்து நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது அசா.1 கத்தியால் குத்துப்பட்டு கீழே கிடந்தார். அங்கிருந்த 108 ஆம்புலன்ஸ் மூலம் சீர்காழி GH க்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்து வைக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.210/2023**

| Deposition of Name | விஜயபாபு | Prosecution | LW-3 as PW-3 |
|---|---|---|---|
| Father Name | மகாலிங்கம் | Defence | |
| Village | பரவெண்காடு | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 41/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **25.08.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து ஹோட்டல் கடையில் வேலை செய்கிறேன். கடந்த 29.08.2023 ம் தேதி இரவு 8.30 மணியளவில் என் மனைவி தொலை பேசி மூலம் சண்டை நடந்தது சம்பந்தமாக தகவல் தெரிவித்தார். அங்கிருந்து சீர்காழீ GH க்கு சென்று அசா.1யை பார்த்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா.1 எனது மச்சான். ஆஜர் எதிரி எனது தம்பி கடந்த 29.08.2023 ம் தேதி இரவு 7.30 மணிக்கு கொள்ளிடம் சரஸ்வதி மெட்ரிகுலேசன் பள்ளி அருகில் ஆஜர் எதிரி அசா.1 ன் இருசக்கர வாகனத்தின் மீது மோதி அவர் வைத்திருந்த கத்தியால் அசா.1 யை முதுகில் குத்தினார் என்றாலும் அதனை நான் நேரடியாக பார்த்தேன் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.210/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ஏசுராஜா | Prosecution | LW-2 as PW-2 |
| Father Name | ராயர் | Defence | |
| Village | சரஸ்வதிவிளாகம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 22/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **25.08.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து டிரைவராக வேலை செய்கிறேன். அசா.**1** எனது அண்ணன் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த கடந்த **29.08.2023** சுமார் இரவு **7.30** நானும் எனது அண்ணனும் எனது இருசக்கர வாகனத்தில் பரவெண்காடு சென்றேன். ஆஜர் எதிரி முரளி என்பவர் எங்கள் மீது வண்டியை மோதி கத்தியால் எனது அண்ணனை விலாவில் குத்தினார். அதன் பிறகு எனது அண்ணன் மயங்கி கீழே விழுந்து விட்டார். பின்னர் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து சீர்காழி **GH**க்கு அழைத்து சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்து வைக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.210/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | விஜயேந்திரன் | Prosecution | LW-1 as PW-1 |
| Father Name | ராயர் | Defence | |
| Village | சரஸ்வதிவிளாகம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 28/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **25.08.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரில் வசித்து மகளிர் சுயஉதவி குழுக்களுக்க கலெக்ஷனராக வேலை செய்து வருகிறேன். எனக்கு ஒரு அக்கா ஒரு தங்கை ஒரு தம்பி, இரண்டு அண்ணன்கள் உள்ளனர். அதில் எனது அக்காவை கொள்ளிடம் பரவெண்காடு என்னும் கிராமத்தில் விஜயபாபு என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். நான் அடிக்கடி எனது அக்கா வீட்டிற்கு சென்று வருவேன். அது போலவே கடந்த **29.08.2023** சுமார் இரவு **7.30** மணியளவில் எனது அக்கா வீட்டிற்கு சென்று வந்தேன். அப்போது அந்த ஊரை சேர்ந்த ஆஜர் எதிரி முரளி என்பவர் என் மீது வண்டியை மோதி இனி மேல் என்னை இந்த ஊருக்கு வரக்கூடாது என்றும் மீறி வந்தால் என்னை கொன்றுவிடுவதாக மிரட்டி கத்தியால் எனது முதுகில் குத்தினார்.

**2.** அதன் பிறகு நான் மயக்கம் போட்டு கீழேவிழுந்துவிட்டேன். அதன் பின் சீர்காழி **GH**யில் எனக்கு நினைவு வந்தது. மேல் சிகிச்சைக்காக சிதம்பரம் **RMMCH** க்கு சென்றேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். சிதம்பரம் **RMMCH**யில் சிகிச்சையில் இருந்த போது கொள்ளிடம் போலிசார் நான் கூற எழுதி கொண்டார்கள் . அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும் அந்த புகார் வாக்குமூலம் அசாஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள். எதிரிக்கும் எனக்கும் எதனால் அன்றைய தினம் சண்டை

நடந்தது என்றால் பரவெண்காடு வை சேர்ந்த ராஜஸ்ரீ என்பவர் என்னுடைய தோழி. நான் அவரிடம் நன்றாக பேசுவேன் அப்போது முரளி என்பவர் ஊருக்கு வரக்கூடாது என்றும் அவரிடம் பேசக்கூடாது என்றும் என்னை மிரட்டினார்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்து வைக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**